ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா2ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா3ந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸதா3 ஹ்ருதி3 ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ பேரணிந்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பேரணிந்து ॥

திருநாங்கூர்ச் செம் பொன் செய்கோயில்

‡பேர் அணிந்துலகத்தவர் தொழுதேத்தும்⋆
    பேர் அருளாளன் எம் பிரானை⋆
வார் அணி முலையாள் மலர் மகளோடு⋆
    மண் மகளும் உடன் நிற்ப⋆
சீர் அணி மாட நாங்கை நன் நடுவுள்⋆
    செம் பொன்செய் கோயிலினுள்ளே⋆
கார் அணி மேகம் நின்றதொப்பானைக்⋆
    கண்டு கொண்டுய்ந்தொழிந்தேனே (1)

பிறப்பொடு மூப்பொன்றில்லவன் தன்னைப்⋆
    பேதியா இன்ப வெள்ளத்தை⋆
இறப்பெதிர் காலம் கழிவும் ஆனானை⋆
    ஏழ் இசையின் சுவை தன்னை⋆
சிறப்புடை மறையோர் நாங்கை நன் நடுவுள்⋆
    செம் பொன்செய் கோயிலினுள்ளே⋆
மறைப் பெரும் பொருளை வானவர் கோனைக்⋆
    கண்டு நான் வாழ்ந்தொழிந்தேனே (2)

திட விசும்பெரி நீர் திங்களும் சுடரும்⋆
    செழு நிலத்துயிர்களும் மற்றும்⋆
படர் பொருள்களுமாய் நின்றவன் தன்னை⋆
    பங்கயத்தயன் அவன் அனைய⋆
திட மொழி மறையோர் நாங்கை நன் நடுவுள்⋆
    செம் பொன்செய் கோயிலினுள்ளே⋆
கடல் நிற வண்ணன் தன்னை நான் அடியேன்⋆
    கண்டு கொண்டுய்ந்தொழிந்தேனே (3)

www.prapatti.com

வசையறு குறளாய் மாவலி வேள்வியில்⋆
மண் அளவிட்டவன் தன்னை⋆
அசைவறும் அமரர் அடியிணை வணங்க⋆
அலை கடல் துயின்ற அம்மானை⋆
திசைமுகன் அனையோர் நாங்கை நன் நடுவுள்⋆
செம் பொன்செய் கோயிலினுள்ளே⋆
உயர் மணி மகுடம் சூடி நின்றானைக்⋆
கண்டு கொண்டுய்ந்தொழிந்தேனே (4)

தீமனத்தரக்கர் திறல் அழித்தவனே!
என்று⋆ சென்றடைந்தவர் தமக்கு⋆
தாய் மனத்திரங்கி அருளினைக் கொடுக்கும்⋆
தயரதன் மதலையைச் சயமே⋆
தேமலர்ப் பொழில் சூழ் நாங்கை நன் நடுவுள்⋆
செம் பொன்செய் கோயிலினுள்ளே⋆
காமனைப் பயந்தான் தன்னை நான் அடியேன்⋆
கண்டு கொண்டுய்ந்தொழிந்தேனே (5)

மல்லைமா முந்நீர் அதர் பட⋆ மலையால்
அணைசெய்து மகிழ்ந்தவன் தன்னை⋆
கல்லின் மீதியன்ற கடி மதிள் இலங்கை
கலங்க⋆ ஓர் வாளி தொட்டானை⋆
செல்வ நான் மறையோர் நாங்கை நன் நடுவுள்⋆
செம் பொன்செய் கோயிலினுள்ளே⋆
அல்லிமா மலராள் தன்னொடும் அடியேன்⋆
கண்டு கொண்டல்லல் தீர்ந்தேனே (6)

வெஞ்சினக் களிறும் வில்லொடு மல்லும்⋆
வெகுண்டிறுத்தடர்த்தவன் தன்னை⋆
கஞ்சனைக் காய்ந்த காளை அம்மானைக்⋆
கரு முகில் திரு நிறத்தவனை⋆
செஞ்சொல் நான் மறையோர் நாங்கை நன் நடுவுள்⋆
செம் பொன்செய் கோயிலினுள்ளே⋆



www.prapatti.com

அஞ்சனக் குன்றம் நின்றதொப்பானைக்⋆
கண்டு கொண்டல்லல் தீர்ந்தேனே (7)

‡அன்றிய வாணன் ஆயிரம் தோளும்
துணிய⋆ அன்றாழி தொட்டானை⋆
மின் திகழ் குடுமி வேங்கட மலை மேல்⋆
மேவிய வேத நல் விளக்கை⋆
தென் திசைத்திலதம் அனையவர் நாங்கைச்⋆
செம் பொன்செய் கோயிலினுள்ளே⋆
மன்றது பொலிய மகிழ்ந்து நின்றானை⋆
வணங்கி நான் வாழ்ந்தொழிந்தேனே (8)

களங்கனி வண்ணா! கண்ணனே! என்தன்⋆
கார் முகிலே! என நினைந்திட்டு⋆
உளம் கனிந்திருக்கும் அடியவர் தங்கள்⋆
உள்ளத்துள் ஊறிய தேனை⋆
தெளிந்த நான்மறையோர் நாங்கை நன் நடுவுள்⋆
செம் பொன்செய் கோயிலினுள்ளே⋆
வளங்கொள் பேர் இன்பம் மன்னி நின்றானை⋆
வணங்கி நான் வாழ்ந்தொழிந்தேனே (9)

‡தேன் அமர் சோலை நாங்கை நன் நடுவுள்⋆
செம் பொன்செய் கோயிலினுள்ளே⋆
வானவர் கோனைக் கண்டமை சொல்லும்⋆
மங்கையார் வாட் கலிகன்றி⋆
ஊனம் இல் பாடல் ஒன்பதோடொன்றும்⋆
ஒழிவின்றிக் கற்று வல்லார்கள்⋆
மானவெண் குடைக் கீழ் வையகம் ஆண்டு⋆
வானவர் ஆகுவர் மகிழ்ந்தே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com